# வழிகாட்டுதல் இல்லையென்றால் முன்னேற்றம் இல்லை!

2009-ஆம் ஆண்டிற்கான பொறியியல், மருத்துவம் படிப்பிற்கான சேர்க்கை நடைபெற்று வருகிறது. கவுன்ஸிலிங்கிற்கு விண்ணப்பித்துள்ள 12-ஆம் வகுப்பு தேறிய மாணவர்கள் ஆர்வமாக கலந்து கொள்கிறார்கள். முஸ்லிம் சமூக மாணவ மாணவிகளும் ஆர்வமாக கவுன்ஸிலிங்கிற்கு விண்ணப்பித்துள் ளனர். தற்போது உள்ள நிலையில் பொறியியலில் தேர்வு செய்ய வேண்டிய பிரிவுகள் குறித்தும் அதன் சாதக பாதகங்கள் குறித்தும் நிறைய அலசப்பட்டு வருகிறது.

முஸ்லிம் சமூகத்தின் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஏராளமான கடமைகளும் பொறுப்புகளும் சமூக/மார்க்க கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. பொருளாதார நோக்கம் கொண்ட இன்றைய உலக நடைமுறையில் இந்த சமூக/மார்க்க பொறுப்புகள் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படுவதில்லை. இது மிகவும் ஆபத்தானது.

முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் முதலில் முஸ்லிமாக வாழ்வதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். நம்முடைய எல்லா நடவடிக்கைகளும் நம்மை படைத்த இறைவனும் இறைத்தூதரும் என்ன வழிகாட்டியுள்ளார்களோ எப்படி முறைப்படுத்தியுள்ளார்களோ, அதனைத் தான் நமது வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் பொருந்திப் பார்க்க வேண்டும்.

ஒரு முஸ்லிம் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் கோட்பாடு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நமது உயர்கல்வியை தேர்ந்து எடுக்கும் முறைகளும் அமைய வேண்டும்.

இன்றைய சில பாடங்கள் பயனற்ற வாழ்க்கை முறையைத் யைத் தரக்கூடியதாக இருக்கிறது. அவைகளை ஒதுக்கிவிட்டு வாழ்க்கைக்கும், மனித சமுதாயத்திற்கும் மார்க்கத்திற்கும் பயனுள்ள பாடத்தை தேர்வு செய்ய வேண்டும். அதற்கு தொடக்கம் முதலே முஸ்லிம் சமுதாய மாணவ, மாணவிக ளுக்கு வழிகாட்டுதல் அவசியமாகிறது. பெண்களைப் பொறுத்த அளவில் திருமணத்திற்கு பிறகும் தான் கற்கின்ற கல்வி உபயோகமாக இருக்ககூடிய அளவில் அதற்குரிய பாடத்தை தேர்வு செய்வது தான் சரியாக இருக்கும்.

குர்ஆனை படித்து அதன் பொருளை உணர்ந்த மாணவனோ மாணவியோ மிகச் சரியான உயர் கல்வியை தேர்வு செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தற்போதைய சூழலில் இந்த வாய்ப்பு எல்லா மாணவ மாணவிகளுக்கும் கிடைப்பதில்லை. இனி வரும் சமுதாயத்தையாவது குர்ஆனின் பொருளை உணர்ந்த சமுதாயமாக மாற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் முழுமையாக கவனம் செலுத்தவேண்டும். அது மனித சமூகத்திற்கும், மறுமை வெற்றிக்கும் உபயோகமாக இருக்கும்.

**CMN சலீம்**

**1-7-2009**